**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்.**

**முன்னிலை : திருமதி. A. சுபஸ்ரீ** L.L.M.,
**( J.O.Code No.TN 02207)**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்.**

**2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 05ம் நாள் வியாழக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ விசுவாவசு வருடம், மாசி திங்கள் 21 ம் நாள்**

**அசல் வழக்கு எண்.200/2021**
**CNR No. TNTI07-000296-2021**

1. R.செல்வி
2.S.சாவித்திரி ..வாதிகள்

..எதிர்..

1. K. சாமிநாதன்
2. K. மாரிமுத்து (எ) ஞானபிரகாசம்
3. N. சுப்பிரமணி
4. சார்பதிவாளர் அவர்கள்,
நல்லூர் சார்பதிவாளர் அலுவலகம்,
நல்லூர். ..பிரதிவாதிகள்

இவ்வழக்கு கடந்த 26.02.2026ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.உதையமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், 4ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.M.கௌதம் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினர்களாகியும், இருதரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரை என் ஆய்வில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>தீர்ப்புரை</u>

(I) தாவா சொத்துக்களை ஒன்பது சம பாகங்களாக பிரிவினை செய்து, நலம் திகடு கலந்து அதில் இரண்டு சம பாகத்தினை வாதிகளுக்கு ஒதுக்கி முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து வாதிகளுக்கு தனி சுவாதீனம் கோரியும்,

(ii) கடந்த 20.11.2020ம் தேதியிட்ட விடுதலை ஆவண எண்.3873/2020 ஆனது செல்லாது, இல்லாநிலையது, செயல்படுத்த முடியாத ஒன்று மற்றும் அது வாதிகளின் உரிமையையும், உரிமைமூலத்தையும் கட்டுப்படுத்தாது என விளம்புகை பரிகாரம் கோரியும்,

(iii) தாவா சொத்துக்களில் உள்ள வாதிகளின் அமைதியான அனுபவத்தையும் சுவாதீனத்தையும் 1 முதல் 4 பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ, முகவர்களோ, வேலையாட்களோ, உறவினர்களோ அல்லது வேறு நபர்களோ இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும்,

(iv) தாவா சொத்து பொருத்து எவ்வித வில்லங்கத்தையும் பதிவு செய்யக் கூடாது என்று 4ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் தாவா செலவுத்தொகை கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்</u> :–

**2.1** திருப்பூர், தனி வட்டாட்சியர் அவர்கள், கடந்த 25.10.1991ம் தேதியன்று வழங்கிய நத்தம்நிலவரி திட்ட பட்டா எண்.235ன் படி தாவா சொத்து ஆதியில் சுப்பன் மகன் கருப்பனுக்கு பாத்தியப்பட்டது. கடந்த 17.04.1994ம்

தேதியன்று கருப்பன் அவரது மனைவி சின்னாள், மகன்கள் K.நாச்சிமுத்து, K.மாரிமுத்து மற்றும் K.சாமிநாதன் ஆகியோர்களை வாரிசாக விட்டுவிட்டு இறந்து விட்டார்.

**2.2** கருப்பனின் இறப்பிற்கு பிறகு தாவா சொத்து அவரது வாரிசுகளின் பொது அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருந்து வந்தது. கடந்த 26.06.2001ம் தேதியன்று சின்னாள் இறந்துவிட்டார். கடந்த 26.05.2008ம் தேதியன்று நாச்சிமுத்து அவரது மனைவி பாப்பாத்தி மற்றும் மகன் சுப்ரமணியை வாரிசாக விட்டுவிட்டு இறந்து விட்டார். பாப்பாத்தி கடந்த 21.08.2015ம் தேதியன்று இறந்துவிட்டார்.

**2.3** இவ்வாறான நிலையில் 2ம் பிரதிவாதி அவரது பெயரை ஞானபிரகாசம் என்று மாற்றிக்கொண்டார். 2ம் பிரதிவாதியின் மனைவி முத்தம்மாள் 27.09.2004ம் தேதியன்று 2ம் பிரதிவாதியையும், வாதிகளையும் வாரிசாக விட்டு விட்டு இறந்துவிட்டார். கருப்பனின் இறப்பிற்கு பிறகு தாவா சொத்து வாதிகள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளின் பொது சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வந்தது.

**2.4** கடந்த 07.08.2021ம் தேதியன்று 1ம் பிரதிவாதி அவரது ஆட்களுடன் தாவா சொத்திற்கு வந்து சட்டத்திற்கு புறம்பாக தாவா சொத்தில் இருந்து வாதிகளை வெளியேற்ற முயற்சித்தார். அப்போது 1ம் பிரதிவாதி, அவர் தான் தாவா சொத்தின் முழு உரிமையாளர் என்றும், 2 மற்றும் 3ம் பிரதிவாதிகளிடமிருந்து 2ம் பிரதிவாதி விடுதலை ஆவணம் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

**2.5** கருப்பனின் வாரிசுகள் என்ற முறையில் பிரிபடாத தாவா சொத்தில் வாதிகளுக்கு 2/9 பாகம் உரிமையுள்ளது. அதன்பிறகு, வாதிகள் வில்லங்கம் எடுத்து பார்த்தபோது தான் 20.11.2020ம் தேதியன்று 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்துள்ள விபரம் தெரியவந்தது. வாதிகளிடம் அனுமதி பெறாமல் அவர்களது பாகத்தையும் சேர்த்து விடுதலை ஆவணம் எழுதிக்கொடுப்பதற்கு 2ம் பிரதிவாதிக்கு உரிமையில்லை. விடுதலை ஆவணம் ஏற்பட்ட போது வாதிகள் மேஜர்களாக இருந்துள்ளார்கள்.

**2.6** தாவா சொத்து கூட்டுக்குடும்ப சொத்து என்பதால் 2ம் பிரதிவாதிக்கு விடுதலை ஆவணம் எழுதி கொடுப்பதற்கு உரிமையில்லை. பிரிபடாத இந்து கூட்டுக்குடும்ப சொத்தில் பங்குரிமையின் அடிப்படையில் பெண்களுக்கும் சம உரிமையுள்ளது. தாவா சொத்தில் வாதிகளும், 2ம் பிரதிவாதியும் எதிரனுபவ சுவாதீனத்தில் உள்ளார்கள். எனவே, தாவா சொத்தில் வாதிகளுக்கு 2/9 பாகம் ஒதுக்கி முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும், 20.11.2020ம் தேதியிட்ட விடுதலை ஆவணம் செல்லாது, இல்லாநிலையது, செயல்படுத்தமுடியாத ஒன்று மற்றும் அது வாதிகளை கட்டுப்படுத்தாது என விளம்புகை பரிகாரம் கோரியும், தாவா சொத்து பொருத்து நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும் அசல் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது

**3. <u>4ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்</u> :–**

வழக்கு முன் அறிவிப்பை 4ம் பிரதிவாதிக்கு அனுப்பாததால் அசல் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. தாவா சொத்து இந்நீதிமன்ற நிதி அதிகார வரம்பை மீறி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து கருப்பனின்

தனிப்பட்ட சொத்து என்பதால் வாதிகளுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை. தாவா சொத்தில் உள்ள 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் பங்கை அவர்கள் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்க முழு உரிமையுள்ளது. அசல் வழக்கில் வழக்குமூலம் இல்லை. தூய கரங்களுடன் வாதிகள் இந்நீதிமன்றத்தை அணுகவில்லை. எனவே, அசல் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. **வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலித்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன :–**

| | |
|---|---|
| 1. | Whether the plaintiff is entitled for the relief of partition as prayed for? |
| 2. | Whether the plaintiff is entitled for the relief of Declaration as prayed for? |
| 3. | Whether the plaintiff is entitled for the relief of permanent injunction as prayed for? |
| 4. | Whether the plaintiff is entitled for the relief of Mandatory injunction as prayed for? |
| 5. | To what other reliefs? |

**5.** வாதிகள் தரப்பில் வா.சா.1 விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. 4ம் பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

**6**. வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், தாவா சொத்து ஆதியில் வாதியின் தாத்தா கருப்பனுக்கு பாத்தியப்பட்டது என்றும், கருப்பனின் வாரிசுகளான வாதிகளுக்கு தெரியாமல், தாவா சொத்தில் உள்ள வாதிகளின் பாகத்தையும் சேர்த்து 2ம் பிரதிவாதி விடுதலை ஆவணம் எழுதிக்கொடுக்க

உரிமையில்லை என்றும், தாவா சொத்தை 1ம் பிரதிவாதி விற்பனை செய்ய முயற்சிப்பதால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தில் உள்ள வாதிகளின் 2/9 பாகத்தை அவர்களுக்கு தனி சுவாதீனம் வழங்கி தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டி வாதிட்டார்.

7. 4ம் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், தாவா சொத்து கருப்பனின் தனிப்பட்ட சொத்து என்பதால் அதில் வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், தாவா சொத்தில் உள்ள 2ம் பிரதிவாதியின் பாகத்தை விடுதலை எழுதிக்கொடுப்பதற்கு அவருக்கு முழு உரிமை உள்ளது என்றும், அசல் வழக்கில் வழக்குமூலம் இல்லை என்றும், எனவே, தாவாவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

8. **தீர்வு :**

**எழுவினா. 1 முதல் 4** :

| | |
|---|---|
| 1. | Whether the plaintiff is entitled for the relief of partition as prayed for? |
| 2. | Whether the plaintiff is entitled for the relief of Declaration as prayed for? |
| 3. | Whether the plaintiff is entitled for the relief of permanent injunction as prayed for? |
| 4. | Whether the plaintiff is entitled for the relief of Mandatory injunction as prayed for? |

மேற்கண்ட எழுவினாக்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகவும் பிணைக்கப்பட்டதாகவும் இருப்பதால் அவைகள் ஒன்றாக தீர்வு காணப்படுகிறது.

**8.1** தாவா சொத்து ஆதியில் வாதிகளின் தாத்தா சுப்பன் மகன் கருப்பன் என்பவருக்கு 25.10.1991ம் தேதியிட்ட நத்தம் நிலவரி திட்ட பட்டா எண்.235ன் படி பாத்தியப்பட்டது என்றும், தாவா சொத்து பொருத்து எவ்வித விருப்புறுதி ஆவணமும் எழுதிவைக்காமல் 17.04.1994ம் தேதியன்று கருப்பன் இறந்துவிட்டார் என்றும், அதன்பிறகு தாவா சொத்தின் பொது அனுபவத்திலும், சுவாதீனத்திலும் கருப்பனின் மனைவி சின்னம்மாள் மற்றும் அவரது மகன்களான K.நாச்சிமுத்து, K.சாமிநாதன், K.மாரிமுத்து என்கிற ஞானபிரகாசம் ஆகியோர்கள் இருந்து வந்ததார்கள் என்றும், 26.06.2001ம் தேதியன்று சின்னம்மாள் இறந்துவிட்டதாகவும், 26.05.2008ம் தேதியன்று நாச்சிமுத்து 3ம் பிரதிவாதி சுப்ரமணியை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், தாவா சொத்து 1 முதல் 3 பிரதிவாதிகளின் பொது அனுபவத்தில் இருந்து வந்தது என்றும், 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தாவா சொத்தில் உள்ள அவர்களது பாகத்தை 1ம் பிரதிவாதிக்கு 20.11.2020ம் தேதியிட்ட விடுதலை ஆவணம் மூலம் விடுதலை எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றும், பிரிபடாத இந்து கூட்டுக்குடும்ப சொத்தான தாவா சொத்தில் பங்குரிமையின் அடிப்படையில் (Co–parcenary property) வாதிகளுக்கு 2/9 பாகம் உரிமையுடையது என்றும், வாதிகளின் பாகத்தையும் சேர்த்து 2ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த விடுதலை ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றும் வாதிகளின் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8.2** தாவா சொத்தில் வாதிகள் கோரும் 2/9 பாகம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா என்பதை முடிவு செய்வதற்கு முதலில் தாவா சொத்து

வாதிகளின் தாத்தா கருப்பனின் பூர்வீக சொத்தா அல்லது தனிப்பட்ட சொத்தா என்பதை முடிவு செய்யவேண்டும்.

**8.3** தாவா சொத்து நத்தம் நிலவரித் திட்டபடி, திருப்பூர், தனி வட்டாட்சியர் அவர்கள் 25.10.1991ம் தேதியன்று வழங்கிய பட்டா எண்.235ன் படி வாதிகளின் தாத்தா கருப்பனுக்கு பாத்தியப்பட்டதாக வாதிகள் அவர்களது வழக்குரையிலும், சாட்சியத்திலும் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், மேற்படி பட்டா எண்.235ஐ வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை. இந்நிலையில், கருப்பனின் மகன்களில் ஒருவரான 2ம் பிரதிவாதியும் கருப்பனின் மற்றொரு இறந்துபோன மகனின் வாரிசான 3ம் பிரதிவாதியும் சேர்ந்து தாவா சொத்தில் அவர்களுக்கு உள்ள தலா 1/3 பாகத்தை 1ம் பிரதிவாதிக்கு விடுதலை செய்து கொடுத்துள்ள வா.சா.ஆ.7 விடுதலை ஆவணத்திலும் நத்தம் நிலவரித் திட்ட பட்டா எண்.235ன் படி கருப்பனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று குறிப்பிட்டுள்ளதால் தாவா சொத்து 25.10.1991ம் தேதியிட்ட நத்தம் நிலவரித்திட்ட பட்டா எண்.235ன் படி கருப்பனுக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**8.4** 1956ம் ஆண்டு **இந்து வாரிசுரிமை சட்டம், பிரிவு 6 மற்றும் 2005ம் ஆண்டு திருத்தச்சட்டபடி,** பிரிபடாத இந்து கூட்டுக்குடும்ப சொத்தில் பங்குதாரர் உரிமையின் அடிப்படையில் பூர்வீக சொத்துக்களில் மட்டுமே பெண்களுக்கு பிறப்பிலே உரிமையுள்ளது.

**8.5** இவ்வழக்கில், தாவா சொத்து 25.10.1991ம் தேதியிட்ட நத்தம் நிலவரித் திட்ட பட்டா எண்.235ன் படி வாதிகளின் தாத்தா கருப்பனுக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்பதாலும், கருப்பன் அவரது வாழ்நாளில்

மேற்படி சொத்து பொருத்து எவ்வித விருப்புறுதி ஆவணமும் எழுதிவைக்காமல் இறந்துள்ளதாலும், கருப்பனின் மனைவி சின்னாளும் இறந்துவிட்டதால் அவர்களது மகன்களான சாமிநாதன் (1ம் பிரதிவாதி), மாரிமுத்து (2ம் பிரதிவாதி) மற்றும் நாச்சிமுத்துவிற்கு தாவா சொத்தில் சம பாகங்கள் உரிமையுள்ளது. நாச்சிமுத்து 3ம் பிரதிவாதியை வாரிசாக விட்டுவிட்டு 26.05.2008ம் தேதியன்று இறந்துவிட்டதால், தாவா சொத்தில் உள்ள அவரது பாகத்தை அவரது மகனான 3ம் பிரதிவாதி அடைகிறார். இவ்வாறான நிலையில் கடந்த 20.11.2020ம் தேதியன்று 2 மற்றும் 3 பிரதிவாதிகள் சேர்ந்து தாவா சொத்தில் உள்ள அவர்களது தலா 1/3 பாகத்தை 1ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.7 விடுதலை ஆவணம் மூலம் விடுதலை செய்துகொடுத்துள்ளது சட்டப்படி நிலைநிற்கத்தக்கது.

**8.6** தாவா சொத்து வாதிகளின் தாத்தா கருப்பனுக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்பதால் அதில் பேத்திகளான வாதிகளுக்கு இந்து வாரிசுரிமை சட்டப்படி பிறப்பினால் எந்த உரிமையும் ஏற்படாது என்று முடிவு செய்து, வாதிகள் கோரியுள்ள பாகப்பிரிவினை, விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து அவ்வாறே எழுவினா 1 முதல் 4க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**<u>எழுவினா 5</u> :**

| | |
|---|---|
| 5. | To what other reliefs? |

**8.7** வாதிகள் கோரியுள்ள பாகப்பிரிவினை, விளம்புகை, நிரந்தர

உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா 1 மற்றும் 4க்கு தீர்வு கண்டதன் அடிப்படையில் வாதிகளுக்கு வேறு எந்த பரிகாரங்களும் கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா 5க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

**முடிவில்,** வாதிகள் கோரிய பாகப்பிரிவினை, விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து, தாவாவை தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 05ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்பு அவையறியப் பகரப்பட்டு, மேற்படி தேதியன்று பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.03.05 18:29:50 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u>** :

வா.சா. 1 – செல்வி

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>** :

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | – | கருப்பன் இறப்புசான்றிதழ் | அசல் |
| வா.சா.ஆ.2 | – | கருப்பன் வாரிசு சான்றிதழ் | அசல் |
| வா.சா.ஆ.3 | – | சின்னான் இறப்பு சான்றிதழ் | அசல் |
| வா.சா.ஆ.4 | – | பாப்பாத்தியின் வாரிசுசான்றிதழ் | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.5 | – | மாதம்மாளின் வாரிசு சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.6 | – | வில்லங்க சான்றிதழ் | கணிணி நகல் |
| வா.சா.ஆ.7 | – | விடுதலை ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.8 | – | சொத்து வரி (5 எண்ணிக்கை) | அசல் |
| வா.சா.ஆ.9 | – | தண்ணீர் வரி ( 4 எண்ணிக்கை) | அசல் |
| வா.சா.ஆ.10 வரிசை | – | மின் கட்டணம் ( 4 எண்ணிக்கை) | அசல் |
| வா.சா.ஆ.11 | – | பல்வகை வரவு ரசீது ( 2 எண்ணிக்கை) | அசல் |
| வா.சா.ஆ.12 | – | வாதியின் ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. |
| வா.சா.ஆ.13 | – | அடங்கல் பதிவேடு | சான்றிட்ட நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை**

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.03.05 18:29:59 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

<u>**Fair / Draft Judgment**</u>

**O.S.No.122/2018**

**Dated: 09.01.2026**

**ADMC – Tiruppur**